செ.வெ.எண்: 88/2017 நாள்: 01.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் தலைமையில், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, நிலஅளவை மற்றும் நிலவரி திட்டப்பயிற்சி இன்று (01.02.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் தலைமையில், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, நில அளவை மற்றும் நிலவரி திட்டப்பயிற்சி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (01.02.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் தெரிவித்ததாவது:-

இதற்கு முன்பாக, புல நிலஅளவை பயிற்சி, புலபடம் வரைதல் மற்றும் அலுவலக பயிற்சி பெற, கிராம நிர்வாக அலுவலர்கள், பிற மாவட்டத்திற்கு சென்று கற்க வேண்டிய சூழ்நிலை இருந்து வந்தது. தற்போது, தமிழக அரசின் ஆணையின்படி, இப்பயிற்சிகளை அந்தந்த மாவட்டத்திலே நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நமது மாவட்டத்தில், நாகர்கோவில் வட்டத்தில் உள்ள 26 கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், பத்மநாபபுரம் வட்டத்தில் உள்ள 53 கிராம நிர்வாக அலுவலர்கள் என மொத்தம் 79 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, இன்று முதல் தொடர்ந்து 30 நாட்களுக்கு இரண்டு கட்டங்களாக பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

முதலாவாதாக, புல நிலஅளவை பயிற்சியும், இரண்டாவதாக புலபடம் வரைதல் மற்றும் அலுவலக பயிற்சியும் வழங்கப்படுகிறது. நாகர்கோவில் வட்டத்திற்கு துணை ஆய்வாளர் திரு. ப.சங்கரபாண்டியன் அவர்களால் புல நிலஅளவை பயிற்சியும், தலைமை வரைவாளர் திரு. கி. பாலசுப்பிரமணியன் அவர்களால் புலபடம் வரைதல் மற்றும் அலுவலக பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

அதேபோல், பத்மநாபபுரம் வட்டத்திற்கு துணை ஆய்வாளர் திரு. லெ.அ.மணிகண்டன் அவர்களால் புல நிலஅளவை பயிற்சியும், தலைமை வரைவாளர் திரு. இரா. இராமசந்திரன் அவர்களால் புலபடம் வரைதல் மற்றும் அலுவலக பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

எனவே, பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களும், பயிற்றுநர்கள் வழங்கும் கருத்துக்கள் மற்றும் வழிமுறைகளை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். மேலும், சந்தேகங்கள் ஏதேனும் இருந்தால், உடனடியாக அதனை, கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால், அடிப்படை பயிற்சி, நிலஅளவை பயிற்சி போன்ற பயிற்சிகள் வருவாய்த்துறை அளவில் மிகவும் முக்கியம் வாய்ந்த பயிற்சிகளாகும். மேலும், இதுபோன்ற பயிற்சிகள் பெற்றிருந்தால் மட்டும்தான், வருவாய்த்துறையில் சிறப்பான பணிகளை மேற்கொள்ள முடியும்.

எனவே, பயிற்சியை ஒருபோதும் கிராம நிர்வாக அலுவலர்கள் தவிர்ப்பது மட்டுமல்லாமல், மக்களின் சேவைகளுக்கேற்ப தங்களது பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், உதவி இயக்குநர் (நில அளவை) திரு. நா. சையத் முஹம்மத், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு. நடராஜன், தொழில்நுட்ப மேலாளர் திரு. டி. கனகராஜப்பன் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.